★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No QB/8945/78

மலர் 21 ஆடி: 10 நம்மிழான்: 1 இதழ்: 163
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 26-7-79

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1979-7-26
PERIODICALS DIVISION
★ LIBRARY ★

## செப்டம்பர் முதல் புதிய சம்பள உயர்வு?

[கொழும்பு]

அரச ஊழியர்களுக்கு புதிய சம்பள உயர்வொன்றை செப்டம்பர் முதலாம் திகதி முதல் வழங்க நேற்றுக்காலை கூடிய மந்திரிசபை கொள்கையளவில் முடிவு செய்துள்ளதாக தெரிகிறது. இன்று மீண்டும் மந்திரிசபை உபகுழு கூடி சம்பள உயர்வுபற்றி இறுதி முடிவு எடுக்கும்.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக, ஜனாதிபதியால் நியமனம் செய்யப்படவுள்ள ஜனாதிபதி கமிஷனின் நிர்வாகத்தைப் பண்முகப்படுத்துவது தொடர்பான குழுவுக்கு தலைவராக ஓய்வுபெற்ற நீதியரசர் விக்ரர் தென்னக்கோனை நியமிப்பதெனவும் மந்திரிசபைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

எட்டுப் பேர் இக்குழுவில் அரசியல்கட்சிகளின் சிபாரிசில் நியமனம் பெறுவர். அரசியல் கட்சிகள் ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு இணங்க தமது பிரதிநிதிகளை நியமனம் செய்யத்தவறும் பட்சத்தில், இதற்கான பிரதிநிதிகளை ஜனாதிபதி நியமனம் செய்வார். (ம)

# இந்தியாவில் மீண்டும் பொதுத்தேர்தல் வரலாம்!

## தேசாய்-சரண் இருவருக்கும் போதிய ஆதரவு இல்லை

### இன்று நிலைமை தெளிவாகும்

புதுடில்லி, ஜூலை 25

**இந்தியாவில் மீண்டும் ஒரு பொதுத்தேர்தல் நடத்தப்பட வேண்டியநிலை உருவாகிவிட்டதாகக் கடைசியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.**

அரசு அமைப்பதற்கு திரு. மொரார்ஜி தேசாயும், திரு. சரண்சிங்கும் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ள லோகசபையின் உறுப்பினர்களின் பட்டியல்கள் அவர்களுக்குப் போதிய ஆதரவு இல்லை என்பதையே காட்டுவதாகத் தெரிகின்றது.

இருதரப்புப் பட்டியல்களிலும் சில எம்.பிக்களின் பெயர்கள் காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

புதிய அரசு அமைப்பதற்குத் தங்களுக்குப் பெரும்பான்மை பலம் இருப்பதை நிரூபிக்கும்படி ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி ஜனதா கட்சியின் பாராளுமன்றக்குழுத் தலைவர் திரு. மொரார்ஜி தேசாய், மதச்சார்பற்ற ஜனதாகட்சியின் தலைவர் திரு. சரண்சிங் ஆகிய இருவரையும் கேட்டிருந்தார். இருவருக்கும் நேற்றுவரை அவர் அவகாசமும் வழங்கியிருந்தார்.

லோகசபையில் இப்பொழுது 538 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் 5 இடங்கள் காலியாகவுள்ளன.

திரு மொரார்ஜி தேசாயினால் சமர்ப்பித்தபட்டியலில் 278 பேர் இருந்தனர். மதச்சார்பற்ற ஜனதா கட்சி பட்டியலில் 279 பேர்கள் இருந்தனர். தமது கட்சிக்கு 280 பேரின் ஆதரவு இருப்பதாக திரு. ராஜ்நாராயணன் கூறினார்.

முக்கிய கட்சிகளில் ஒன்றான அகாலிதளம் நடுநிலைமை வகிக்கப்போவதாக அறிவித்துவிட்டது.

இந்திய கம்யூனிஸ்ட்கட்சி திரு. சரண்சிங்கை ஆதரிப்பதாக அறிவித்துள்ளது. இக் கட்சிக்கு 7 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் திரு. மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதாகட்சியை ஆதரிப்பதாக அறிவித்துள்ளது.

இதற்கிடையில் சில கட்சிகளின் உறுப்பினர்கள் அடிக்கடி கட்சிகளை மாற்றிவருவதாகவும் கூறப்படுகின்றது.

காங்கிரஸ் கட்சியின் 5 உறுப்பினர்கள் தாம் திரு. சரண்சிங்கை ஆதரிக்கவில்லையென்று அறிவித்துள்ளனர். இவர்கள் திரு சவானுக்கு இதை அறிவித்துள்ளதுடன் ஜனாதிபதிக்கும் அறிவித்துள்ளனர். முஸ்லிம் லீக் சரண்சிங்கை ஆதரிக்க முடிவுசெய்துள்ளது.

## ய ழ். மாநகரசபை கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மாநகரசபை கூட்டம் நாளை மாலை நகர முதல்வர் திரு. ஆர். விஸ்வநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. [எ]

## புராதனநகரங்கள் தொலைக்காட்சி படமாகும்

(கொழும்பு)

இலங்கையின் புராதன நகரங்களை, தொலைக்காட்சிப் படமாக தயாரிப்பதற்கு யுனஸ்கோ நிறுவனம் ஆரம்பித்துள்ளது. இதற்கான ஆரம்பவேலைகள் நேற்றுக்காலை கொழும்பு நூதனசாலை மண்டபத்தில் தொடக்கப்பட்டன.

இலங்கை அரசுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் 28 நிமிடங்கள் காட்டக்கூடியதாக ஆங்கிலம், ஸ்பானிஷ், பிரெஞ்சு, ருசிய மொழியில் இப்படம் தயாரிக்கப்படும்.

மூன்று வாரங்கள் நடைபெறும் இப்படப்பிடிப்பு அனுராதபுரம், பொலனறுவை, கண்டி, சிகிரிய ஆகிய இடங்களில் நடாத்தப்படும். (ம)

## சிறுவர் ஆண்டு மூன்று புதிய முத்திரைகள்

[கொழும்பு]

சர்வதேச சிறுவர் ஆண்டை நினைவுகூருமுகமாக இலங்கை அரசு மூன்று புதிய தபால் முத்திரைகளை அடுத்த செவ்வாய்க்கிழமை வெளியிடவுள்ளது.

5 சதம், 3 ரூபாய், 5 ரூபாய் பெறுமதியான புதிய முத்திரைகளை, ஜனாதிபதி திரு ஜே. ஆர் ஜெயவர்த்தன கொழும்பு பிரதம தபாலகத்தில் அன்றைய தினம் காலை வெளியிட்டுவைப்பார். [ம]

## சிங்கப்பூர் அரிசிக்கப்பல் காங்கேசன்துறை வந்தது

### இறக்குமதிவேலை நாளை ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

ஒரு லட்சம் அரிசி மூடைகளுடன் "எம். வி. பன்ரா ரஸ்" என்னும் சிங்கப்பூர்க் கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்துள்ளது.

ஒரு மாத இடைவெளிக்குப் பின்னர் நேற்றுமாலை வந்து சேர்ந்திருக்கும் இக்கப்பலின் இறக்குமதி வேலைகள் நாளை ஆரம்பமாகும்.

இறக்குமதி வேலைகளில் ஐநூறு துறைமுகத் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள் என்றும் ஐம்பது லொறி

(6-ம் பக்கம் பார்க்க)

## இன்று ரதோற்சவம்

[யாழ்ப்பாணம்]

யாழ் வைத்தீஸ்வரன் கோவில் தேவி மகோற்சவ தேர்த்திருவிழா இன்று காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. (செ)

43 பிரயாணிகளுடன்

## பங்களாதேஷ் விமானம் திசைதிருப்பப்பட்டது

### இந்திய அதிகாரிகளிடம் பயங்கரவாதிகள் சரண்

புதுடில்லி, ஜூலை 25

பங்களாதேஷில் உள்ளூர் பயணமொன்றை மேற்கொண்டிருந்த விமானமொன்றை பலவந்தமாகத் திசைதிருப்பிய பயங்கரவாதிகள் நேற்று கல்கத்தாவில் நிராயுதபாணிகளாக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டனர்.

43 பிரயாணிகளுடன் டாக்காவிலிருந்து ஜெசூரிக்குப் பறந்து கொண்டிருக்கும்போது திசைதிருப்பப்பட்டது கடத்தல்காரர்கள் தாம் தப்பிக்கொள்வதற்கு ஒரு விமானமும் விமானியும் தரவேண்டுமென கேட்டது

[6-ம் பக்கம் பார்க்க]

## "ஜனாதிபதியின் நல்லாசிகளுடன் யாழ். வந்துள்ளேன்"

### மாவட்ட அமைச்சர் செய்தி

[யாழ்ப்பாணம்]

ஜனாதிபதியின் நல்லாசிகளையும் நல்லெண்ணங்களையும் யாழ்ப்பாண மக்களுக்கு கொண்டுவந்திருப்பதாக யாழ் மாவட்ட அமைச்சர் திரு. உக்கு பண்டா வீரகோன் கூறினார்.

யாழ் மாவட்டத்துக்கு முதல் தடவையாக நேற்று வருகை தந்த மாவட்ட அமைச்சர் பத்திரிகைகளுக்கு விடுத்த செய்தியில் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த நாட்டின் சகல இன மக்களும் பரஸ்பரம் புரிந்து கொள்ளும் ஒருநிலையை உருவாக்க நான் விரும்புகிறேன். இந்த நாட்டின் சகல பிரஜைகளும் சமமாகவும் நியாயமாகவும் நீதியாகவும் நடத்தப்படுவதற்கும் நான் வழிசமைப்பேன். நாம் பலநூற்றாண்டு காலமாக இந்த நாட்டிலே வாழ்ந்துவருகின்றோம். பிணக்குகள் இருந்தபோதிலும் நாம் தொடர்ந்தும் சகோதரர்களாக இந்த நாட்டிலே வாழத்தான்வேண்டும் எனது பணிகளை நிறைவேற்றுவதற்கு இப்பகுதி மக்களின் முழுஒத்துழைப்பும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றேன்.

ஹெலிகொப்டரில் வந்திறங்கினர்

யாழ்ப்பாண மாவட்ட மந்

[6-ம் பக்கம் பார்க்க]

## 'முனியப்பதாசன்' காலமானர்

[யாழ்ப்பாணம்]

பிரபல சிறுகதை ஆசிரியரும் முன்னாள் 'ஈழநாடு' ஆசிரியப்பகுதி ஊழியருமான தா. சண்முகதாசன் [முனியப்பதாசன்] நேற்றுக் காலமானர். அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று நடைபெறும்.

## இந்திராவுக்கு மீண்டும் சம்மன்ஸ்

புதுடில்லி, ஜூலை 25

ஜீப் ஊழல் வழக்குத் தொடர்பாக அடுத்தமாதம் 2-ம் திகதி தம்முன் ஆஜராகும்படி விசேஷ நீதிமன்ற நீதிபதி திரு எம் எஸ் ஜோஷி முன்னாள் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்திக்கு சம்மன்ஸ் அனுப்பியுள்ளார்.

## மெய்வல்லுநர் போட்டி

28-7-79 சனிக்கிழமை நடைபெறவிருந்த கோப்பாய் அரசினர் மகளிர் ஆசிரியர் கலாசாலை மெய்வல்லுநர் போட்டி பிற்போடப்பட்டுள்ளது.

இ. ஆனந்தக்குமாரசாமி
அதிபர்.

3136

---

## 33ஸ்ரீ 3126 பெட்போட் (BEDFORD) வான்
## 5 ஸ்ரீ 4126 வோக்ஸ்வகன் (VOLKSWAGEN) கார்

ஆகியன

## விற்பனைக்குண்டு

விபரங்களுக்கு :-

**த பிறுன்ஸ் கம்பனி லிமிட்.,**
191, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 7680

---

## வயரிங் வேலைசெய்வதற்காக-விலைக்கூறு

யாழ் மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் மின்தறி - ஆலையில் அமைந்துள்ள புதிய கட்டிடத்திற்கும், 6 மின்தறிகளுக்கும் வயரிங்வேலை செய்வதற்காக பதிவுசெய்யப்பட்ட தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடம் இருந்து விலைக்கூறுகள் கோரப்படுகின்றன.

விபரங்களுக்கு:

**யாழ் மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்,**
10|1, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

விண்ணப்பங்கள்: 3-8-79ம் திகதி முற்பகல் 12-30க்கிடையில் இடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

3137 தலைவர்.

---


# விவசாயிகளே!

■ மிளகாய் ■ உருளைக்கிழங்கு
■ வெங்காயம் ■ நெல்
■ மரக்கறிவகை ■ பழவகை

ஆகிய எல்லாப்பயிர்களைப் பாதிக்கும், பூச்சிபுழுக்கள்-நோய்கள் களைகள் ஆகிய பீடைகளைக் கட்டுப்படுத்தவும், அழிக்கவும் எல்லாவித

**கிருமிநாசினிகள்**
**பங்கசுகொல்லிகள்**
**களைக்கொல்லிகள்**

எப்பொழுதும் சுலபமாகவும், கலப்பற்றும் எங்களிடம் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
பசளைவகைகளும் கிடைக்கும்.



உங்கள் விவசாய பிரச்சனைகள் எதுவானாலும் எங்கள் இலவச அறிவுரைகளுக்கு இன்றே நாடுங்கள்

AGROS

**அக்ரோஸ் லிமிட்டெட்**
56, கந்தபபசேகரம் வீதி, யாழ்ப்பாணம்
(புதிய நிர்வாக அதிகாரி - ஜெகநீசன்ஸ் - கொழும்பு)


---

## சர்க்கஸ் கொட்டகையில் ஒரு தாயின் ஓலம்

(வண்ணார்பண்ணை)

சர்க்கஸ் காட்சிகளை ரசித்துக் கொண்டிருந்த சிறு குழந்தையும் தாயும் காட்சிமுடிந்த சமயம் கதறியழுத பரிதாபக் காட்சி ஒன்று சனிக்கிழமை பகல் கொட்டகையில் நடந்தது.

பகல் ஒருமணிக்காட்சியைப் பார்க்க தனது கைக்குழந்தையுடன் வந்திருந்த தாய் காட்சிகளைப் பார்த்துவிட்டு காட்சிகள் முடிந்ததும் குழந்தையின் கையில் கிடந்த 400ரூபா பெறுமதியான தங்க வளையல்களைக் காணாது கதறி அழத் தொடங்கினர்.

சனநெருக்கடியில் இச்சம்பவம் நடந்ததாகத் தெரிகிறது. இந்த பின் அபயக்குரல்கேட்ட பலர் கூட்டமாகதிரண்டு அனுதாபம் தெரிவிக்க முடிந்ததே தவிர திருடனைப் பிடிக்கமுடியவில்லை. (அ)

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்
## வ- பி- போ- சபை

அரசாங்க திணைக்களங்கள், யாக்கங்கள் ஆகியவற்றில் ஒப்பந்த வேலைகளுக்குப் பொறுப்பேற்பதற்குப் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அல்லது வேறு எந்த நிறுவகத்திலும் இதை பொருந்த வேலையைத் திருப்திகரமாகப் பூர்த்திசெய்தவர்களிடமிருந்து யாழ்ப்பாணம், காரைநகரில் கீழ்க்காணும் வேலைகளைப் பொறுப்பேற்பதற்கு பொறிபிட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன:-

(1) வீதிவழியும், சுற்று வட்டகை வெளியும் அமைத்தல்.
(2) வசு நிலைய அலுவலகம், சிற்றுண்டிச் சாலை, தங்குமண்டபம் அமைத்தல்.

வ. பி. போ. சபை, நிர்வாக உத்தியோகத்தரிடம் கிடைக்கக்கூடிய குறித்த படிவங்களில் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணம் 15 ரூபா செலுத்துவதன் பேரில் படிவங்கள் வழங்கப்படும். ஆகஸ்து 10ஆந் திகதி வரை படிவங்கள் வழங்கப்படும். எல்லாக் கேள்விப்பத்திரங்களும் ஆகஸ்து 14 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவஞ்சலில் அனுப்பப்படவேண்டும். ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நேரமும், கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரமும் அதே நாளில் 14-00 மணித்தியாலமாகும்.

தலைவர்
கேள்விப்பத்திரச்சபை,
வ. பி. போ. ச.
165, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாண

3138

---

## சாவகச்சேரி நகராட்சிமன்றம்
## ஆதனவரி அறிவித்தல்

1979ம் ஆண்டு 2ம் காலாண்டிற்குரிய ஆதனவரிசெலுத்துவதற்கு 31-7-79ம் திகதி வரை கால நீடிப்புசெய்யப்பட்டுள்ளது. ஆகவே நீங்கள் செலுத்தவேண்டிய வரிகளை 31-7-79ம் திகதி நண்பகல் 12-30 மணிக்கு முன்பாக சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் செலுத்தி பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொள்ள வேண்டும். தவறின், ஆதன வரியுடன் பத்துவீதம் தண்டப்பணமும் சேர்த்து அறவிடப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

த. நவரத்தினராசா
செயலாளர்
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி,
23-7-79

3140

---

## பங்கீட்டுமுறையில் மண்எண்ணை?

(கொழும்பு)

புதிய உணவுத் திட்டத்தின்படி ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதாந்தம் 8 போத்தல் மண்ணெண்ணை செப்டம்பர் மாதத்தில் இருந்து விநியோகிக்கப்படவிருப்பதாகத் தெரிகிறது.

மாதம் 300 ரூபாவுக்கும் குறைந்த வருமானம்பெறுபவர்களுக்கு உணவு முத்திரைகள் வழங்கப்படும். 300 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பெறுவோருக்கு மண்ணெண்ணை கார்ட் வழங்கப்படவிருப்பதாகத் தெரியவருகிறது.

மண்ணெண்ணை விநியோகத்தை சிக்கனப்படுத்துவதற்காகவே இத்திட்டம் கொண்டுவரப்பட இருப்பதாகத் தெரிகிறது.

## பருப்பு தொடர்ந்து இறக்குமதி

கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் தொடர்ந்தும் மைசூர்பருப்பை இறக்குமதி செய்யும். புதிய உணவு முத்திரைத் திட்டத்தின் கீழ் மைசூர்பருப்பு வழங்கப்படமாட்டாது. மைசூர்பருப்பை பழைய விலையிலும் பார்க்க கூடுதலான விலையிலேயே பாவனையாளர்கள் பெற்றுக் கொள்ளவேண்டியிருக்கும் எனத் தெரிகிறது.

---

## வடமராட்சி விவசாயிகளுக்கு பயிர்நஷ்டஈடு

(உடுப்பிட்டி)

வடமராட்சிப் பகுதியில் 1978-79 ஆண்டுக்குரிய பெரும் போகத்தில் நெற்பயிர்ச் செய்கையில் அழிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கைப் பயிர்க்காப்புறுதிச் சபை பயிர்க் காப்புறுதி நஷ்டஈட்டை வழங்கி வருகின்றது.

புலோலி கமநலசேவை நிலையம், அம்பன் கமநலசேவை நிலையம் ஆகியவற்றின் மூலம் பயிர்க் காப்புறுதிச்சபை இப் பயிர்க் காப்புறுதி இழப்பீட்டுப் பணத்தை வழங்கி வருகின்றது. (அ)

---

## வரி விளம்பரம்

### தேவை

ஒரு பிரபல ஹோட்டல் மதுபான பாருக்கு வெயிற்றர் உடனடியாகத் தேவை. கார் ஓட்டக்கூடியவராகவும், லைசென்ஸ் உள்ளவராகவும் இருக்க வேண்டும். வயது 35க்கு மேல் விரும்பத்தக்கது. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் சமூகமளிக்கவும். 25, கச்சேரி - நல்லூர் ரோட், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 3141

### பயிற்சி

Civil Draughtsmanship & Quantity Surveying ஒருவருட பயிற்சிநெறி பொறியியலாளர்களால் கற்பிக்கப்படும். பயில விரும்புவோர்கள் 10-8-79க்கு முன் Navas Civil Engineering Services, No. 42, Clock Tower Road, Jaffna என்ற விலாசத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும். 3133

---

கீரிமலையில்

## நீராடச் சென்றவர் ஆஸ்பத்திரியில் அனுமதி

(வண்ணார்பண்ணை)

கீரிமலைக் புனிததீர்த்தம் ஆடச்சென்ற இளைஞர் ஒருவர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டார்.

நேற்று கீரிமலையில் மாவைக் கந்தன் தீர்த்த உற்சவ தினம் போது கீரிமலைக் கடலில் நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் கடலில் நீராடும்போது உலிப்பு வந்து அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த நேரத்தில் அருகில் நின்றவர்கள் இதைக் கண்டு தொண்டர்களது உதவியுடன் இளைஞரை கரைசேர்த்தனர்.

தொண்டர்களால் முதலுதவிச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்ட போதும், மயக்கம் தெளியாததினால் இவரை காங்கேசன் துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

---

## கேள்விப்பத்திர அறிவித்தல்

### வசுக்களைக் கழுவுதல்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த வசுக்களைக் கழுவுவதற்கான பொறிபிட்ட கூறுவிலைகள், தனிப்பட்டவர்களிடமிருந்தும், அல்லது தொழில் நிலையங்களிடமிருந்தும் கோரப்படுகின்றன. கழுவுதலையும் துப்புரவாக்கலையும் மேற்கொள்ளவேண்டிய வசுக்களின் சராசரித் தொகையும் இடங்களும் கீழே தரப்பட்டுள்ளன:

| சாலைகள்: | வசுக்களின் தொகைகள்: |
| --- | --- |
| யாழ்ப்பாணம் | 181 |
| பருத்தித்துறை | 57 |
| காரைநகர் | 26 |
| கிளிநொச்சி | 26 |
| முல்லைத்தீவு | 13 |
| வவுனியா | 13 |
| மன்னார் | 27 |

மேலதிக விபரங்களும் இதர நிபந்தனைகளும் கூறுவிலைப் படிவங்களும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 15/-யை செலுத்துவதன்பேரில், வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் நிருவாக உத்தியோகத்தரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். எல்லாக் கூறுவிலைகளும் 1979 ஆகஸ்ட் 9ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னதாகப் பதிவஞ்சலில் அனுப்பப்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிநேரமும், கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் நேரமும் அதே நாளில் 14-30 மணித்தியாலமாகும்.

**தலைவர்,**
கேள்விப் பத்திரச்சபை,
வ. பி. போ. ச.
165, 4ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

3139

## ஆசிரியர் இடமாற்றம்:

# விண்ணப்பத் திகதியை பின்போடுக

## இ. த. ஆ. சங்கம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

ஆசிரியர் இடமாற்றத்துக்கான விண்ணப்ப முடிவு திகதியை ஆகஸ்ட் 30ம் திகதி வரை பின்போடும்படி இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சைக் கேட்டுள்ளது.

மேற்படி சங்கத்தின் செயலாளர் திரு மாசிலாமணி கல்வி அமைச்சின் செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

பத்திரிகைச் செய்திகளில் இருந்தும், வானொலிச் செய்தியிலிருந்தும் தை 1980க்கான இடமாற்ற விண்ணப்ப முடிவு திகதி ஆகஸ்ட் 5ம் திகதி என அறிகின்றோம். ஆனால் இவ்விடமாற்றத் திட்டம்பற்றியதும், மாதிரி இடமாற்ற விண்ணப்பப் படிவம் பற்றியதுமான சுற்றுநிருபங்கள் இதுவரை பாடசாலை அதிபர்களுக்கோ அல்லது ஆசிரியர்களுக்கோ கிடைக்கவில்லை. இதனால் ஆசிரியர்கள் உரிய நேரத்தில் தமது விண்ணப்பத்தை சமர்ப்பிக்க மிகவும் சிரமமாக இருக்கின்றது. எனவே இடமாற்ற விண்ணப்ப முடிவு திகதியை ஆகஸ்ட் 30ம் திகதிவரை பின்போடுமாறும் இதுசம்பந்தமான சுற்றுநிருபங்கள் உடனடியாகக் கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

## "மரங்களை அழிக்கின்ற மனிதன் அவற்றை நாட்டவும் வேண்டும்"

(யோசபுரம்)

"உயிரினங்களின் வாழ்வுக்கு மரம், செடி, கொடி முதலிய தாவரங்கள் இன்றியமையாதன. இம்மரஞ் செடிகள் இயற்கையினாலும் பிராணிகளாலும் அழிவுறுகின்றன. இவ்வழிவுகளிலே கூடிய பங்கைச் செய்யும் மனிதன் உணவுக்காகவும், விறகுக்காகவும், வீடு, பாடசாலை, பணிமனை போன்ற கட்டடங்களுக்காகவும், பணத்துக்காகவும் தினமும் தாவரங்களை அழித்துக்கொண்டே இருக்கிறான். இவ்விதம் அழித்துக்கொண்டே போனால் மரங்களை நம்பி வாழுகின்ற மனிதனின் நிலை கவலைக்கிடமாகும். ஆகவே அழிக்கின்ற மனிதன் மரஞ்செடிகளை வளர்ப்பதற்கும் முன்வரவேண்டும்."

இவ்வாறு மல்லாவி அரசினர் கனிஷ்ட உயர்தர வித்தியாலயத்தில் அதிபர் திரு செ. மயில்வாகனத்தின் தலைமையிலே நடைபெற்ற மரம் நாட்டு விழாவிலே பேசிய மேலதிக மாவட்ட விவசாய விஸ்தரிப்பு அதிகாரி திரு க. வரதராசா குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், "எமது வாழ்வின் அவசிய தேவைகளுக்காக நாம் மரங்களை அழிக்கவேண்டியுள்ளது. ஆனால் நாம் அழிக்கும் மரங்களுக்கு ஈடு செய்வதற்காகப் புதிய மரங்களை நாட்டி வளர்க்கவேண்டும் அப்போது தான் நமது எதிர்காலம் வளமானதாய் இருக்கும் பெருகிவரும் சனத்தொகையை நோக்கியும் இதை இன்னும் தீவிரமாக செய்யவேண்டும்" என்றார்.

மரம் நாட்டு விழா சம்பந்தமாக மாணவர்களுக்கிடையே வகுப்பு ரீதியாக நடாத்திய கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்ற தி. மகாலட்சுமி, இ. ஸ்ரீநிவாசன், டா. ஸ்ரீகரன், க. ஹேமராணி, ஆ. அன்பரசி, க. நிர்மலாதேவி, செ. சற்குணேஸ்வரன், க. சுகந்தினி ஆகிய மாணவர்களுக்கான பரிசுகளை திரு வரதராசா வழங்கினார்.

(கு)

## மக்கள் கருத்து

### ஏன் இந்த வித்தியாசம்?

கடந்த 22ம் திகதி மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ரதோற்சவத்திற்கு சித்தன்கேணியிலிருந்து பஸ் மூலம் சென்றிருந்தேன்.

சித்தன்கேணியிலிருந்து மாவிட்டபுரம் சென்றவர்களுக்கு டிக்கட் கட்டணமாக 80 சதம் வசூலிக்கப்பட்டது.

மீண்டும் மாவிட்டபுரத்தில் இருந்து சித்தன்கேணிக்கு திரும்பிவருவதற்கு 90 சதம் கட்டணம் பெறப்பட்டது.

கோயிலுக்குப் போகும்போது சென்ற பஸ்ஸும் வீட்டுக்குத் திரும்பும் பஸ்ஸும் காரைநகர் டிப்போவைச் சேர்ந்தவையே இரண்டு பஸ்களுமே ஒரே பாதையிலேயே சேவையில் ஈடுபட்டிருந்தன.

இதுகுறித்து கோயிலில் இருந்து திரும்பிய பஸ்ஸில் கடமையாற்றிய கண்டக்டரிடம் இதுபற்றி முறையிட்டேன். அவர் ஏதோ சாக்குப்போக்குக் கூறி எனது புகாரைத் தட்டிக்கழித்தார்:

இதுபோன்ற விசேடசேவைகளை நடத்தும் காரைநகர் டிப்போவின் பஸ்களில் இதே மாதிரி கட்டணங்கள் வித்தியாசப்படுவதை முன்னரும் அவதானித்துள்ளேன்.

விசேட சேவைகளை நடத்துவதற்கு முன்னர் பணிப்புரைகளை விடுக்கும் உயர்அதிகாரிகள் இதுபோன்ற விடயங்களைக் கவனிப்பதில்லையா?

பஸ் நடத்துனர்கள் தமது எண்ணப்படியே பஸ் கட்டணங்களை வசூலிக்கின்றனரா என்றே இதுபோன்ற சந்தர்ப்பங்களில் எண்ணத் தோன்றுகின்றது

மேலும் இதுபோன்ற ஒழுங்கீனங்கள் நடைபெறாமல் இருக்க உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

சி. சபாரத்தினம்

சங்கானை.

## பாஸ்போர்ட் கிடைப்பதில் கஷ்டம்

(கொழும்பு)

கடவுச்சீட்டுக்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதென, குடிவரவு குடியகல்வு திணைக்களத்தைச் சேர்ந்த கடவுச்சீட்டுப்பகுதி தெரிவித்துள்ளது. இதனால் மேற்படி காரியாலயம் வெள்ளிக்கிழமை முதல் திங்கட்கிழமை பிற்பகல்வரை மூடப்பட்டிருந்தது.

பெருந் தொகையானோர், குறிப்பாக தென்ஆசியப் பிராந்தியங்களுக்கு வேலை தேடிச் செல்வோர் காரியாலயத்திற்கு வந்திருந்தும் தட்டுப்பாடு காரணமாக ஏமாற்றமடையவேண்டியிருந்தது. அவசர தேவைகளுக்கான பாஸ்போட்டுக்களும் மீளப் புதுப்பிக்கப்பட்ட பாஸ்போட்டுகளுமே வழங்கப்பட்டன

குடியகல்வு, குடிவரவுதிணைக்களக்கட்டுப்பாட்டாளர் திரு. நியூட்டன் சமரசிங்கா தட்டுப்பாட்டினை நிவர்த்திசெய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் தற்போது இந்நிலை ஓரளவு சீரடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

## பிராந்திய இ.போ.ச. மூலம் சைக்கிள் விநியோகம்

[கொழும்பு]

மத்திய போக்குவரத்துச் சபை இறக்குமதி செய்யவிருக்கும் 50,000 சைக்கிள்களும் பிராந்திய போக்குவரத்துச் சபைகள்மூலம் பொதுமக்களுக்கு வழங்கவிருப்பதாகப் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பெற்றோலின் விலை ஏற்றத்தாலும் போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்கும் முகமாகவும் சைக்கிள்கள் இறக்குமதி செய்யப்பட இருக்கின்றன.

பெருந்தொகையான சைக்கிள்கள் இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது, சைக்கிள்களின் பாகங்களை இறக்குமதி செய்து இங்கேயே உருவாக்கம் செய்யப்படும் என்றும் ஒவ்வொரு சைக்கிள்களும் 500/-வுக்கு விற்கப்படலாம் என அமைச்சர் தெரிவித்தார்.

## 'நாம் எல்லோரும் ஒரே நாட்டினரே'

[கொழும்பு]

இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் கடந்த ஏப்ரல் மாதம் 4ம் திகதி நடைபெற்ற வருடாந்த பரிசளிப்புவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஆங்கிலத்தில் உரையாற்றிய ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் பேச்சுக்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு புத்தகவடிவில் வெளியிடப்பட்டுள்ளது.

"நாம் எல்லோரும் ஒரே நாட்டினரே" என்ற தலைப்பைக் கொண்டு வெளியிடப்பட்டுள்ள இப் புத்தகம் சகல பாடசாலைகளுக்கும் அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

[உடுப் ஸ்]

## கத்தோலிக்க சங்க பொதுச்சபை

(சாவகச்சேரி)

யாழ்ப்பாண மறை மாவட்டத்திலுள்ள கத்தோலிக்க ஆசிரிய சங்கக் கிளைகள் பதின்மூன்றினதும் முக்கிய நிர்வாகிகள் கொண்ட பொதுச்சபை நிர்வாகசபைக் கூட்டம் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் மறைக் கல்வி நடுநிலைய இயக்குநர் வண. பிரா ஜே. நிக்கலஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

புதுவருட நிர்வாகிகளாகக் கீழ்கண்டோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்: ஆர். யோசேப், பொதுச் செயலாளர்: சி. வின்சன்ட், பொருளாளர்: ஏ. யோசேப், துணைத்தலைவர்கள்: எஸ். பி. அலோசியஸ், தே தொம்மை, துணைச் செயலாளர்: அ. அந்தோனிமுத்து

## 5 வீடுகளே கையளிக்கப்பட்டன

[புலோலி]

அரசின் இரண்டாவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு தேர்தற் தொகுதிகள் தோறும் 10 வீடுகள் அமைக்கப்பட்டு வீடற்றவர்களுக்கு வழங்கும் திட்டத்திற்கமைய பருத்தித்துறைத் தொகுதியில் மணற்காட்டுக் கிராமத்தில் அமைக்கப்பட்ட வீடுகளில் ஐந்தை கடந்த சனிக்கிழமை தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு வை வேலும்மயிலும் சம்பிரதாய பூர்வமாகக் கையளித்தார். இக்கையளிப்பு வைபவத்தில் யாழ். கட்டிடத் திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு தங்கவேலாயுதமும் கலந்து கொண்டார்.

ஏனைய ஐந்து வீடுகளுக்கும் தெரிவு செய்யப்பட்ட பிரச்னை காரணமாக ஐந்து வீடுகள் வழங்கப்படவில்லை. விசாரணையின் பின்னர் இவ் ஐந்து வீடுகளும் கையளிக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மது ஒழிப்பு மன்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரில் மதுஒழிப்பு மன்றம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

லக்ஷ்மி நாராயணன் சுவாமிஜியை போஷகராகக் கொண்டு அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இம்மன்றத்தின் தலைவராக, திரு சி. கணேசமூர்த்தியும் காரியதரிசியாக திரு தா. சிவஞானமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இம்மன்றத்தில் அங்கத்தவர்களாகச் சேர்பவர்கள் ஒவ்வொரு தமிழ் மாதத்தினதும் முதல் சனிக்கிழமை தோறும் கூடுவார்கள் என்றும் இவர்களின் "முன்னேற்ற" நடவடிக்கைகள் பரிசீலனை செய்யப்படுமென்றும், அன்றைய தினம் அங்கத்தவர்களுக்கு மோர்விநியோகம்இடம்பெறும் என்றும், இந்த ஏற்பாடுகள் நாவலர் வீதியிலுள்ள அன்னசத்திரத்தில் நடைபெறுமென்றும் மன்றப் போஷகர் தெரிவித்துள்ளார்.

## பூநகரியில் புகழ்பெற்ற பொன்னுவெளி விநாயகர்

பொன்னுவெளி என்னும் கிராமம் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பூநகரி உ. அ. அதிபர் பிரிவிலுள்ளது. இக்குறிச்சி முற்காலத்தில் பிரபல்யமாக விளங்கியது. குளக்கோட்டைச் சக்கரவர்த்தி, காஞ்சிபுரத்திலுள்ள "பல்லவன்" என்னும் வேளாண் பிரபுவை அவனது தோழர்கள் இருவருடன் அழைப்பித்துக் குடியேற்றி, பல்லவனையே அதிபதியாக நியமித்தான் என யாழ்ப்பாணச் சரித்திரம் கூறுகிறது. இப்படியான இக்கிராமம் இப்போது பிற்போக்கடைந்து வருகிறது மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டது. இது மிருகங்கள் அடர்ந்த காட்டுப்பிரதேசம். போக்குவரத்து வசதி மிகக் குறைவு குடிசனம் குறைவு ஆயினும் வித்வசிரோன்மணி ஸ்ரீமான் ந. ச. பொன்னம்பலபிள்ளை (நாவலர் மருகர்) ஸ்ரீலஸ்ரீ யோசர் சுவாமிகள், ஸ்ரீ. ஸ்ரீ. குழந்தைவேற்சுவாமி, ஆசுகவி ஸ்ரீ கல்லடி வேலுப்பிள்ளை முதலான பெரியார்களின் பாதச்சுவடு பதிந்த இடமாகும்.

இப்படிப் பிரபல்யம் வாய்ந்த இக்கிராமம் இப்போது வரவரப் பிற்போக்கடைந்து வருகிறது. இங்குள்ளவர்களின் பிரதான தொழில் நெல் வேளாண்மையாகும். சிறுபான்மை தோட்டச் செய்கையும் உண்டு, நீர்ப்பாய்ச்சும் வசதியில்லை மாணுவாரியாகவே வேளாண்மை செய்வது மழையையே நம்பியிருப்பது சில வருடங்களில் வேளாண்மை வரய்க்கும் சில வருடங்களில் வயாது. இதனால் பொருளாதார வசதி மிகக் குறைவு இங்கே விநாயகர் ஆலயம் ஒன்றும் அம்மன் கோயில் ஒன்றும் உள்ளது. விநாயகர் ஆலயம் மிகப் பழுதாய்விட்டது. மண்டபங்களும் சரிவரக் கட்டவில்லை. "கோயில் இல்லாக் குடிகளும் இல்லையுக" என்னும் முதுமொழிக்கிணங்க விருத்தி குறைந்து கொண்டே போகிறது. அதனால் இவ்வூர்வாசிகள் எப்படியும் யாசகம் பண்ணியாவது ஆலயத்துக்குச் செய்யும் திருத்தங்களைச் செய்து கும்பாபிஷேகம் செய்யவேணுமென்றும், கிரமமாய் நடைபெறக்கூடிய ஒழுங்கு செய்ய வேணுமென்றும், யோசித்து சித்தார்த்தி வருடம் ஆனி மாதம் இருபத்தொராந்திகதி (5-7-79) வியாழக்கிழமை காலை நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் விக்னேஸ்வரப் பெருமானுக்கு பாஸ்தாயன அபிஷேகம் செய்துள்ளார்கள்.

ஸ்ரீலஸ்ரீ. நாவலர் பெருமான் அவர்கள் "புதிதாய்க் கோயில்கள் கட்டுவதிலும் பார்க்க பழங்கோயில்களைத் திருத்தி வழிபடுதல் எவ்வளவோ பெரும்புண்ணியம்" என்று கூறியுள்ளார்கள். இக்கோயிலைத் திருத்தவும் புதிய மண்டபம் கட்டவும் கும்பாபிஷேகம் நடத்தவும் பெருந்தொகைப் பணம் தேவை. பொருளாதாரம் குறைந்த இவ்வூர் வாசிகள் இதனை ஒப்பேற்றிக் கொள்ளமாட்டார்கள்.

ஆகையால் இக்கோயிலில் செய்யவேண்டிய திருப்பணி வேலைகளைச் செய்தற்கு, இலங்கையில் வாழும் புண்ணிய சீலர்களாகிய சைவப்புரவுகளும், பிறதேசங்களில் வாழும் புண்ணிய சீலர்களும் தங்களால் இயன்ற பொருளுதவி செய்து தரும்படி இவ்வூர் வாசிகளின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

கு. அருளம்பலம்
(முன்னாள் உடையார்)
பொன்னுவெளி
வேரவில்,
பூநகரி (வழி)

## "சகல அத்தியாவசியப் பொருட்களும் கிடைக்க வழிசெய்க"

[நெடுந்தீவு]

"மக்களுக்குத் தேவையான சகல அத்தியாவசிய பாவனைப் பொருட்களையும் தட்டுப்பாடு ஏற்படாதவகையில் விநியோகிக்க நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறும் அவர்களுக்கு சிரமமில்லாத வகையில் கிளைநிலையங்களைத் திறந்துவைத்து உதவியளிக்குமாறும் நெடுந்தீவு பொதுச் சேவைக் கூட்டுறவுச்சங்க ஊழியர்களுடன் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் சங்கத்தின் பிரதித் தலைவர் திரு. நா. இலட்சுமணராசா சகல ஊழியர்களையும் கேட்டுக் கொண்டார்.

அவர் தமதுஉரையில் "நாம் புங்குடுதீவு ப. நோ. கூ. சங்கத்தின் நிருவாகத்தின் கீழ் இருந்து பிரிந்து தனியான நிருவாகத்தை அமைத்துக் கொண்டதன் மூலம் பாரிய பொறுப்பு ஒன்றை ஏற்றுக் கொண்டுள்ளோம், கூட்டுறவுத்துறையில் சுதந்திரமான போக்கு என்றஎமதுகொள்கை எமது ஸ்திரமான விசுவாசமான உழைப்பின் மூலமே வலியுறுத்தப்பட வேண்டும், புதிதாகப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டபின்னர் நிருவாகத்தினர்களோ ஊழியர்களோ தமது கடமையைச் சரியாகச் செய்யாவிடின் பொதுமக்களின் நம்பிக்கையை இழக்கவேண்டி ஏற்படும்". என்றார்.

(அ)

தேசாய்க்கா, சரண்சிங்குக்கா ஆதரவு?

# இடதுசாரி அணிக்குள் பிளவு!

## நடுநிலைவகிக்க 3 கட்சிகள் முடிவு

புதுடில்லி, ஜுலை, 25 இந்தியாவில் அரசு அமைக்கும் கட்சிக்கு ஆதரவளிப்பதில் எழுந்துள்ள நெருக்கடியை அடுத்து இடதுசாரிக்கட்சிக் கூட்டணிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளது.

அரசு அமைக்க முயலும் திரு. தேசாய்க்கோ, அன்றி திரு. சரண்சிங்குக்கோ ஆதரவளிப்பதில்லையென்றும் இவ்விடயத்தில் நடுநிலைமைவகிப்பதென்றும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட்கட்சி, புரட்சிவாத சோஷலிஸ்ட்கட்சி, பார்வாட் புளக் ஆகியன தீர்மானித்துள்ளன.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட் (22), புரட்சிவாத சோஷலிஸ்ட் (4), பார்வாட் புளக் (3) ஆகிய மூன்று கட்சிகளைச் சேர்ந்த 29 எம். பி க்கள் லோகசபையில் உள்ளனர்.

இந்திய கம்யூனிஸ்ட் (7), பி, டபிள்யு பி. (6) ஆகிய இடதுசாரிக்கட்சிகளும் இன்று கூடி எவருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்து முடிவு செய்யும். (இ)

### அதிரடி நடவடிக்கை: ஆசிரியர் சங்கம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைக்குச் சென்று அதிரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு, ஆசிரியர்களைத் துன்புறுத்திவரும், சில விஷமிகளினதும், சில கணக்குப் பரிசோதனை உத்தியோகத்தர்களினதும், செயலுக்கு வடமாகாண ஆசிரியர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது;

இது தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்று இலங்கை ஆசிரியர் சங்கத்தலைவருக்கு நடவடிக்கை எடுப்பதன் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

வடமாகாண ஆசிரியர் சங்கத்தலைவர் திரு ச. இ சுந்தரலிங்கம், இலங்கை ஆசிரியர் சங்கத்தலைவருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்திருப்பதாவது;

"பாடசாலைகளுக்கு சென்ற விஷமிகளும், கணக்கு உத்தியோகத்தர்களும் ஆசிரியர்களிடம் போதனைக் குறிப்புக்களையும், நேர அட்டவணையையும் கேட்டுள்ளனர். யாழ். நகரத்திலுள்ள வேம்படி மகளிர் கல்லூரி, மத்திய கல்லூரிக்கும் இவர்கள் சென்றுள்ளனர். மத்திய கல்லூரியில ஆசிரியர் ஒருவரை பயமுறுத்தியுள்ளனர். இது பற்றி அதிபருக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

"பளை, கிளிநொச்சி பகுதிகளிலும், இப்படியான பயமுறுத்தல் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. அங்கு சில ஆசிரியர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

"கல்விச் சேவையைசேராத இவர்களுக்கு ஆசிரியர்கள் விடயத்தில் தலையிட என்ன உரிமை இருக்கிறது? உடனடியாக இது பற்றி நடவடிக்கை எடுப்பதுடன் நாங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றியும் அறிவியுங்கள்". (-)

"சரண்சிங்குக்கே ஆதரவு;

# காங்கிரஸின் முடிவில் மாற்றம் ஏற்படாது"

## தலைவர் சுவரண்சிங் கருத்து

புதுடில்லி, ஜுலை, 25 திரு. சரண்சிங்குக்கு உத்தியோகபூர்வ காங்கிரஸ் அளிக்க இருக்கும் ஆதரவு குறித்து அக்கட்சி மீண்டும் பரிசீலனை செய்யமாட்டாதென்று அதன் தலைவர் திரு சுவரண்சிங்தெரிவித்துள்ளார்.

திரு சரண்சிங்குக்கு ஆதரவளிப்பதென்ற கட்சியின் முடிவை உத்தியோகபூர்வ காங்கிரஸ் மறுபரிசீலனைசெய்ய வேண்டுமென்று ஜனதா கட்சித்தலைவர் திரு சந்திரசேகர் விடுத்திருந்த கோரிக்கை தொடர்பாகக் கருத்துத்தெரிவிக்கையிலேயே திரு சுவரண்சிங் தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ்கட்சியின் தீர்மானம் பொதுக்கருத்துடன் எடுக்கப்பட்ட இறுதிமுடிவென்றும் இதில் எதுவிதமாற்றமும் செய்யப்படமாட்டாதென்றும் திரு சுவரண்சிங் கூறினார். (இ)

### 2400 அரசியல் கைதிகள் விடுதலை

ஹவானா, ஜுலை 25 கியூபா அரசு 500 அரசியல் கைதிகளை நேற்று விடுதலை செய்தது.

கியூபா அரசு கடந்தவருடம் நவம்பரில் அமுல்செய்த மன்னிப்புத் திட்டத்தின்கீழ் இதுவரை 2400 அரசியற் கைதிகள் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர் என்றும் மேலும் 1200 அரசியற் கைதிகள் விடுதலை செய்யப்படுவர் என்றும் கியூபா அரசின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

### ஜெயப்பிரகாஷருக்கு வயிற்றுவலி

பம்பாய், ஜுலை, 25 பம்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ்நாராயணுக்கு இன்று காலை வயிற்றுவலியும் இரத்தக்கசிவும் இருந்ததாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

சரண்சிங் ஆதரவுப்பட்டியல்

### வெளிவரும்போது பலருக்கு ஆச்சரியம் ஏற்ப[டு]ம்

ராஜ்நாராயணன் கூறுகிறார்

புதுடில்லி, ஜுலை 25 இந்தியப் பிரதமர் பதவிக்கு வரமுயற்சிக்கும் திரு. சரண்சிங்குக்கு ஆதரவளிப்பவர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்படும்போது அதில் பலரும் ஆச்சரியம் அடையக்கூடிய பெயர்கள் தெரிவிக்கப்படும் என முன்னாள் சுகாதார அமைச்சரும் 'ஜனதா-எஸ்' கட்சி அமைப்பாளருமானவருமான திரு. ராஜ்நாராயண் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் இந்திரா காங்கிரஸ் கட்சியும் உத்தியோகபூர்வ காங்கிரஸும் திரு. சரண்சிங்குக்கு தாங்கள் அளிக்க இருக்கும் ஆதரவை உறுதிப்படுத்தி ஜனாதிபதி திரு. சஞ்சீவரெட்டிக்கு கடிதம் எழுதியுள்ளது.

இதேவேளையில் திரு. ஜகஜீவன்ராம் கர்நாடக முதல்வர் திரு. தேவராஜ் அர்ஸுடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு உரையாடினார். (இ)

# பூட்டோ சகாக்கள் தூக்கிலிடப்பட்டனர்

இஸ்லாமாபாத், ஜுலை 25 அரசியல் படுகொலை ஒன்று தொடர்பாக பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி ஜுல்பிகார் அலிபூட்டோவுடன் மரணதண்டனைவிதிக்கப்பட்ட நால்வரும் இன்று காலை தூக்கிலிடப்பட்டனர்.

நவாப் முகமட் அகமட் கானின் படுகொலை தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு ஜனாப் பூட்டோவுடன் மரண தண்டனை விதிக்கப்பட்ட குலாம் மூஸ்தாபா, அஸில் இக்பால் ஆகியோர் உட்பட நால்வருமே இன்று காலை தூக்கிலிடப்பட்டனர்.

இதே வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஜனாப் பூட்டோ கடந்த ஏப்ரல் மாதம் 4ம் திகதி பலத்த நெருக்கடிகளுக்கு மத்தியில் தூக்கிலிடப்பட்டது தெரிந்ததே.

### தென் ஆபிரிக்காவில் இந்து நிலையம்

(டர்பன்)

தென்னாபிரிக்காவில் இந்து சமய கலாச்சார நிலையம் ஒன்று அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது

சனாதன வேத தர்ம சபாவினரால் அமைக்கப்படவுள்ள இந்நிலையத்தில் ஆலயம், மண்டபம், பாராட்டு மண்டபம் என்று மூன்று வகுப்பறைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளபோதும் நிதிநிலைமை காரணமாக தற்போது ஆலயம் மட்டுமே அமைக்கப் பட்டுள்ளதாக சபாவின் தலைவர் திரு எஸ் லக்ஷ்மன் தெரிவித்துள்ளார்.

### எகிப்து-இஸ்ரேலுக்கு 130கோடி டாலர் ஆயுதங்கள்

வாஷிங்டன், ஜுலை, 25 எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் அமெரிக்கா 130 கோடி டாலர் பெறுமதியான ஆயுதங்களை விநியோகிக்கத் தீர்மானித்துள்ளது. (இ)

### 450 எதிர்க்கட்சி வீரர்கள் கைது!

சாலிஸ்பரி, ஜுலை, 25 ரொடீஷியாவின் பிரதான எதிர்க்கட்சியான வண. சித்தோலேயின் ஸிம்பாப்வே ஆபிரிக்க தேசிய முன்னணியின் 450 வீரர்களை அரசாங்க இராணுவத்தினர் கைதுசெய்துள்ளனரென்று எதிர்க்கட்சித் தலைமைப்பீடம் அரசாங்கத்திடம் புகார்செய்துள்ளது. (இ)

### பிரிட்டிஷ் குடிவரவில் கட்டுப்பாடு

லண்டன், ஜுலை 25 பிரிட்டிஷ் அரசு குடிவரவு தொடர்பாக பல கட்டுப்பாடுகளைக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளது.

அடுத்த செப்டம்பரில் இது தொடர்பான சட்டமூலம் ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

### தென்ஆபிரிக்காவில் சாயிபாபா ஜனனவிழா

(டர்பன்)

பகவான் ஸ்ரீ சத்தியசாயிபாபாவின் 53வது பிறந்ததினவிழா தென்ஆபிரிக்காவில் உள்ள லக்சுமி நாராயணன் கோவில் மண்டபத்தில் நடைபெற்றது.

தென்ஆபிரிக்கா, பகவான் சத்தியசாயிபாபா நிலையத்தினரால் நடாத்தப்பட்ட இவ் விழாவில் விசேஷபூஜையும், ஆராதனைகளும் நடைபெற்ற இறுதியில் நாட்டிய நிகழ்ச்சிகளும் நடைபெற்றன (ஏ)


வயலில் வளம் பெருக வழி செய்யும்

என்ட்றின் 20 - என்டோசல்பான் 35



பயிர்கள் நாசமடைந்து பரிதவிக்கும் கமக்காரரே! உங்கள் வருவாயை நாசப்படுத்தும் பூச்சி புழுக்களை விரைவாக ஒழித்துக்கட்ட என்ட்றின் 20, என்டோசல்பான் 35. இரண்டுமே சிறந்த வழிகள்.

சக்தி செறிந்த தரமே சிறந்த என்ட்றின் 20. என்டோசல்பான் 35. இரண்டையும் பாவியுங்கள்.

சுபீட்சமான வாழ்வு பெறப் பாவியுங்கள் - என்ட்றின் 20 - என்டோசல்பான் 35

விநியோகிப்போர்:

ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்

62, ஜேதவன ரோட், ரேபைக, கொழும்பு 14

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சிவாஜி-சாவித்திரி
வடிவுக்கு வளைகாப்பு

றியோ போன்: 7607
(நகரமண்டபம்)
தினசரி: 10-30, 4-45, 7-00, 9-30
Shadow Man


## ஆவரம்பிட்டியில் ஆடிப்பூரவிழா

(யாழ்ப்பாணம்)

அராலிகிழக்கு ஆவரம்பிட்டி முத்துமாரியம்மன் ஆலயஆடிப் பூரவிழாவும் பொங்கலும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

பகல் விசேஷ அபிஷேகபூசைகளும், மாலை பொங்கலும், இரவு அம்பாள் வீதி உலாவும் நடைபெறும். (கோ)


வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி: 10-30, 2-30, 6-30, & 9-45.
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
ஔவையார்

ஸிடோ (யாழ்.நகர்) போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
கல்யாணபரிசு
(புதிய பிரதி)

3-வது ஜனத்திரள் நிறைந்த வாரம்!
SHANTHI JAFFNA Phone: 7642
10-30, 2-30, 4-45, & 7-00
CHARLES BRONSON in
Mr. M JESTYK-
Adults - Action Packed - Color
Don't miss this ction Packed movie
NEXT ATTRACTION 'Juggernaut' Color Suspense/Thriller

இன்று மட்டும்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 10-30, பி. ப. 2-30, 6-15, 9-45
THE GOD FATHER
(Adults Only - வயதுவந்தவர்களுக்கு மட்டும்)
27-ந் திகதி முதல் வருகிறான் அந்த மர்ம மனிதன்
JACKAL - "ஜக்கோல்"
காணத் தயாராகுங்கள்.

மனோகரா (யாழ். நகர்) 10-30, 2-30, 6-30, 9-45
பிரேம் நஷீர்-தாம்பரம் லலிதா-எஸ். வி. சுப்பையா
ஒரே வழி
வருகிறது: சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்

கடைசி வாரம்
ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்., லதா, சந்திரகலா, மஞ்சுளா நடித்த
உலகம் சுற்றும் வாலிபன்

ராஜா யாழ் நகர் தினசரி 4 காட்சிகள்
எம் ஜி. ஆர் - ஈ. வி. சரோஜா நடித்த
கொடுத்து வைத்தவள்
(புதிய பிரதி)

REGAL Daily at 2-00, 4-30, 7-00 & 9-30 p. m. only
(Jaffna) Saturday & Sunday at 10-30 a. m.
RICHARD BENJAMIN
in
M.G.M's
THE SUNSHINE BOYS
(color)
Coming soon OMEN

கடைசி சில தினங்கள்
வின்சர் (யாழ்ப்பாணம்) போன்: 466
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-00, 6-00, & 9-30
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)


## இன்றைய பலன்

ஆடிமாதம் 10-ந் திகதி

(வியாழக்கிழமை)

(26-7-1979)

**மேடம்:** சிந்தனைக் கவலைகள் தாக்கும், சிறிவரும் கோபம், உடன்பிறந்த சகோதரத்தின் உடல்நிலையும் கவலை தரும்.

**இடபம்:** இதயங்கள் இணைவதற்கு இன்று நல்ல நாள், அபிப்பிராய பேதம் மறையும், பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர், பந்துக்கள் ஆதரவு பெருகும், குடும்பத்தில் அமைதி நிலவும்.

**மிதுனம்:** உடல்நலத்தில் நல்ல முன்னேற்றம் காணப்படுகின்றது, எதிலும் ஒரு புதிய உதிவேகம் காணப்படும், வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படுவதற்கும் இடமுண்டு, வரவேற்கவேண்டிய தினம்.

**கடகம்:** சிந்தனை புதிர் போடும், சீறிவரும் கோபம், பெரியவர்களைப் பகைத்துக் கொள்ள நேரிடலாம், தொழில்துறையில் புதிய கவலைகள் தோன்றக்கூடும், தெய்வநம்பிக்கை சிறந்த பலனைத் தரும்.

**சிங்கம்:** நான் என்ற அகம்பாவம் தலை தூக்கி நிற்கும், வேண்டியவர்களின் ஆலோசனையைக் கேட்காததினால் பின்பு வருந்த நேரிடும், வயிற்றுக் கோளாறுக்கு இடமளியாது கவனமெடுக்கவும்.

**கன்னி:** கனிவான நினைவுகள் தலை தூக்கும், காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு, இனிதான பேச்சின் மூலம் எல்லோரையும் உசிகரிப்பீர்கள், தனச் சிறப்புக்கும் இடமேற்படும், சுபதினம்.

**துலாம்:** உணர்ச்சிமயமான தினம், மனப்போராட்டங்கள் நடைபெறும், உடல் நலனும் பாதிக்கப்படலாம், குடும்பத்தில் ஏற்படும் மோதல்கள் விரக்தி மனப்பான்மையை உருவாக்கும்.

**விருச்சிகம்:** விலைபொருள் விருத்தியுடன் விருத்துக்கும் இடமுண்டு, தாய்வழித் தனமும் தாராளமாகக் கிடைக்கும், எதிர்கால வாழ்வுக்கான புதிய திட்டத்தை இன்று உருவாக்குவீர்கள், சிறப்பான தினம்.

**தனுசு:** நீண்ட நாட்களின் பின்பு இன்று நிறைவான தினம், எதிர்பார்த்த பொருள் கைவந்து சேரும், பிரமச்சாரிகளின் வாழ்க்கையில் மாறலின் கலை தாக்கும், சுவையான சம்பவம் இடம்பெறும்.

**மகரம்:** அதிகாரக் குறைவுக்கு இடமுண்டு, அபாயகரமான தொழில்களில் ஈடுபடுபவர்கள் அதிக கவனம் செலுத்தவேண்டும், குழந்தையொன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம், அவசர நடவடிக்கைகளைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** இல்லத்தில் இனிமை மலரும்; உறவினர்கள் கூடுவர், உற்சாகமான பொழுதுபோக்கும் உண்டு.

**மீனம்:** முன்னேற்றத்தில் தடை ஏற்படும், இறுபிணி வாட்டும், ஆதரவு தருபவர்களுடன் பகைத்துக்கொள்ள வேண்டாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை


வெஸ்லி
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-பத்மினி
தூக்கு தூக்கி


# கலைச்சங்கத்துக்கு ஜனாதிபதி வாழ்த்து

(கொழும்பு)

வெள்ளிவிழா காணும் கொழும்பு கலைச்சங்கத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று, கலைச்சங்க காப்பாளர் கேட் முதலியார் திரு. ஏ. வி. எஸ் அமரசேகரா தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி திரு. ஜே ஆர் ஜயவர்த்தனாவைச் சந்தித்து ஆசிபெற்றது.

இக்குழுவில், கலைச்சங்கத்தின் காப்பாளர்களில் ஒருவரான திரு பேஜ் திருமதி யோகாபாலச்சந்திரன் கலைச் சங்க செயலாளர் திரு. கே. பாலச்சந்திரன் திருமதி இந்திராராசஜ் ஆகியோர் இடம் பெற்றனர்.

கலைச் சங்கத்தினர் ஜனாதிபதியைச் சந்தித்தபோது, கடந்த இருபத்தைந்து வருடங்களாக இந்த நாட்டின் சகல இன மக்களினதும் கலை, கலாசார வளர்ச்சிக்கும் கலைச்சங்கம் ஆற்றிய பணிகளை விளக்கிக் கூறியபோது ஜனாதிபதி கலைச்சங்கத்தினரின் கலைத்தொண்டைப் பெரிதும் பாராட்டி, "உங்களின் இப் பாரிய சேவை தொடரவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

## "போட்டிகளில் தோல்வியென்றால் சலிப்படையக்கூடாது"

(அரியாலை)

"கல்வித்துறையில் மிகவும் முன்னணியில் விளங்கும் பரியோவான் கல்லூரி விளையாட்டுத்துறையிலும் மிக உயர்ந்து விளங்குவது மகிழ்ச்சிக்குரியதாகும். இக்கல்லூரியில் கல்வி கற்ற மாணவர்கள் இன்று சிறந்த கல்விமான்களாக விளங்குவதுடன் சிறந்த ஒழுக்கமும்-கட்டுப்பாடும் உடையவர்களாக நாட்டின் பல பாகங்களிலும் விசேஷமாக வேலி நாடுகளிலும் பணியாற்றிவருகின்றார்கள். போட்டிகளில் தோல்வியடைந்த வீரர்கள் தோல்வியில் மனத்தைச் செலுத்தாது தொடர்ந்தும் முயற்சிசெய்து வெற்றியை அடையவேண்டும்".

இவ்வாறு யாழ். பரியோவான் கல்லூரியின் ஆரம்பபாடசாலை விளையாட்டுப்போட்டிக்குப் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் கலால் இலாகா பொறுப்பதிகாரி திரு வி சிவப்பிரகாசம் பேசுகையில் குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திரு. வி ச. ஆனந்தராசா தலைமையில் நடைபெற்ற போட்டியில் ஆரம்ப பாடசாலைத் தலைமையாசிரியர் திரு வி துரைச்சாமி வரவேற்புரை நிகழ்த்தினார்.

போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு திருமதி சிவ... ர காசுப் பரிசில்கள் வழங்கினார்.

தொம்சன் இல்லம் வெற்றி விருதைப் பெற்றுக்கொண்டது. ஏனைய இல்லங்களான போன்சன், பாஜிற்றர், ஹண்டி, பீற்றோ, இலங்கள் புள்ளிவடிப்படையில்முறையே வெளிவாகின.

8 வயதுப் பிரிவில் செல்வன் ஜே பி செல்வச்சந்திரனும், 9 வயதுப்பிரிவில் செல்வன் எம். சம்பந்தனும் 10 வயதுப் பிரிவில் செல்வன் ஜே. பி. செல்வந்திரனும் 11 வயதுப் பிரிவில் செல்வன் சஞ்சீவன் பகபதியும் 12 வயதுப் பிரிவில் செல்வன் ஏ வாகீசனும் சாம்பியன் வீரர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களுக்குச் சாம்பியன் வீரர்களுக்கான கிண்ணங்கள் வழங்கப்பட்டன. (வ)

## மூன்று போட்டிகளில் முதலிடம்



அண்மையில் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் கிருஷ்ணா இல்லத்தைச் சேர்ந்த செல்வி தயாமதி சிவபாதம் தான் பங்குபற்றிய மூன்று விளையாட்டுகளிலும் முதலாமிடத்தைப் பெற்று பதின்மூன்று வயதிற்குட்பட்ட வீராங்கனைக்குரிய வெற்றிக்கிண்ணத்தைத் தட்டிக்கொண்டார் இவர் சண்டிலிப்பாயைச் சேர்ந்த சிவபாதம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியாவார்.

## பெண்ணுக்கு றிமாண்ட்

(மாவிட்டபுரம்)

பெண்மணியொருவரின் கழுத்திலிருந்த தங்கச்சங்கிலியை அபேஸ்செய்த பதுமொரு பெண் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழாவிலேயே இத்துணிகரத்திருட்டு இடம்பெற்றது.

ஈரவெட்டியிலிருந்து தேர்த்திருவிழா பார்க்கவந்திருந்த தங்கம்மா வழிபாட்டிலீடுபட்டிருந்தபோது, அவரது கழுத்திலிருந்த 2000 ரூபா பெறுமதியான தங்கச்சங்கிலியை சனங்களோடு சனங்களாக நின்ற ஒரு பெண் அறுத்துக்கொண்டு நழுவ முயன்றாராம். இவர், மாவை ஆலய வீதியில் கடமையிலீடுபட்டிருந்த காங்கேசன்துறைப் பொலிசாரால் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு இவரிடமிருந்து தங்கச் சங்கிலியும் மீட்கப்பட்டது.

இப்பெண் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது இம்மாதம் 30ந் திகதிவரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிடப்பட்டது.

## தவறணையை மூட உத்தேசம்

(புலோலி)

பருத்தித்துறை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க மணற்காட்டுக் கள்ளுத்தவறணை உடைக்கப்பட்டு களவாடப்பட்டுள்ளது.

அடிக்கடி இக் கள்ளுத் தவறணையில் களவு நடைபெற்று வருவதனால் இத் தவறணையை மூடிவிட உத்தேசிக்கப்பட்டு வருவதாக பருத்தித்துறை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கப் பொதுமுகாமையாளர் தெரிவித்தார். (வ)

புலோலி கொலைவழக்கு:

# விசாரணை நடுவில் 3 எதிரிகள் விடுதலை

[யாழ்ப்பாணம்]

புலோலி கொலைவழக்கில் விசாரணை நடுவில் 3 எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜாமீல் முன்னிலையில் நடைபெற்றது.

விசாரணை நடுவில் அரச சட்டத்தரணி ஆர் தவராஜா 3ம், 4ம், 5ம் எதிரிகளுக்கு மாறாக சாட்சியமில்லாததினால் அவர்கள்மீதான குற்றச்சாட்டுகளை வாபஸ்பெறுவதாகத் தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் நீதிபதி 3ம் எதிரி கந்தன் முருகேசு, 4ம் எதிரி முருகேசு ஜெயவீரசிங்கம், 5ம் எதிரி முருகேசு மயில்வாகனம் ஆகியோரை விடுதலைசெய்தார்.

இவ்வழக்கில் புலோலியில் 77 அக்டோபர் 13ம் திகதி கந்தன் கணபதியைக் கொலை செய்ததாகவும், கணபதி நாகமுத்துவைக் கொலை செய்ய முயற்சித்ததாகவும், கதிரன் வேலன் அல்லது வேலுப்பிள்ளை வேலுப்பிள்ளை சகுநாதன், கந்தன் முருகேசு, முருகேசு ஜெயவீரசிங்கம், முருகேசு மயில்வாகனம் ஆகியோர்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி முதலாம் இரண்டாம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி வி. என்நவரத்தினம், சட்டத்தரணி எஸ்.சுரேந்திரன், [சட்டத்தரணி செல்வி தம்பித்துரை] ஆகியோரும், 3ம், 4ம், 5ம் எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலன், திருமதி நிமலினி அம்பிகைபாலன் ஆகியோர் ஆஜரானார்கள். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். தவராசா வழக்கை நடத்தினார்.

விசாரணையைப் பார்ப்பதற்கு நீதிமன்றத்தில் பெண்கள் உட்பட ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

## ஐயாவுக்கு சூடு விழுந்தது

கணேசு தவமூர்த்தி சாட்சியமளிக்கையில் கூறியதாவது: "இறந்த கந்தன் கணபதி என் தகப்பனார். சம்பவம் நடந்த தினம் காலை 10 மணிக்கு நானும் இறந்தவரும் நாகமுத்துவும் வீட்டிலிருந்து வல்லிபுரக்கோவிலுக்குப் போகும் பாதையால் வரும்போது ஒழுங்கையில் திடீரென்று ஐந்து பேர் வந்து ரோட்டில் மிதந்தார்கள். ரோட்டிற்கு வந்து அவர்கள் கல்லால் எறிந்தார்கள் 5 எதிரிகளையும் எனது இருவயதுமுதல் தெரியும். முதலில் எதிரிகள் வருவது தெரியாது. பின் அவர்கள் ரோட்டிற்கு வந்தபின்னரே தெரியும். 35 யார் தூரத்தில் எதிரிகள் வந்தார்கள். 2ம் எதிரி கல்லால் எறிந்தார். பின் அவர் வீட்டுப் படலைக்குப்போய் துவக்குக்கொண்டுவந்தார். வேலியில் துவக்கை செருகிவைத்திருந்தாரா என்று தெரியாது. அரைநிமிடத்தில் துவக்குடன் வந்தார். அவர் வந்து நாகமுத்துவைச் சுட்டார். 30யார் தூரத்தில் நின்று 2ம் எதிரி சுட்டார். அவர் வேலியில் பிடித்துக்கொண்டு நின்றார். காலில் காயப்பட்டது. ரத்தம் ஒழுகியது. பின்னர் ஐயாவுக்குச் சூடுவிழுந்தது. ஒன்றுஇரண்டு நிமிடங்களில் நடந்தது. இரண்டாம் முறையும் எதிரி சுட்டார். மகனிடம் துவக்கை வாங்கி சுட்டார். பக்கத்தில் வேறு இருந்தது. அதற்கிடையில் தூண் ஒன்று இருந்தது. நான் அங்கு ஒளித்துவிட்டேன்.

## நெஞ்சில் சூடு

ஐயாவின் நெஞ்சில் சூடுபட்டது. கொஞ்சநேரம் நின்றார். பின் நான் போய் ஐயாவைப் பிடித்தேன். எதிரிகள் பின் ஒழுங்கைக்குப் போய்விட்டார்கள். பின்னர் தகப்பனார் ஒன்றும் பேசவில்லை. அவரைப் பிடிக்க அவர் அப்படியே பின்னால் சாய்ந்தார்; நான் அவரைப் படுக்கவைத்தபின் சத்தம்போட்டுக் குளறினேன். 3ம், 4ம், 5ம் எதிரிகள் திரும்பி ரோட்டிற்கு வந்து கல்லால் எறிந்தார்கள். அயலவர்கள் வந்தார்கள். பின் பொலிஸிற்கு அறிவித்தோம். வேறு ஆளைப் பொலிஸிற்கு அனுப்பினேன். எதிரிகள் அவர்களைத் திருப்பி அனுப்பிவிட்டார்கள். நான் பின் பொலிஸ் நிலையத்திற்குப்போய் முறைப்பாடு கொடுத்தேன். பொலிஸாருடன் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தேன். காயமடைந்தவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பினேன்.

## வி. சி. கிணற்றுப் பிரச்னை

வி. சி. கிணற்றுக்கு அந்த இடத்தில் உள்ளவர்கள் எல்லாரும் தண்ணீர் அள்ளுவார்கள் அந்தக் கிணற்றிற்கு ஒரு துலா மாத்திரம் உண்டு. அதை அள்ளம் பிடித்துக்கொண்டு நின்றும் மற்றவர்கள் தண்ணீர் அள்ள இயலாது. கிணற்றில் பொலிடோல் ஊற்றி முறைப்பாடு செய்யப்பட்டு பிரச்னை நடந்தது. இதனால் 3ம், 4ம் எதிரிகளுக்கும் எங்களுக்கு மிடையில் பிரச்னை ஏற்பட்டது. மற்றவர்கள் 3ம், 4ம், எதிரிகளுக்கு நெருங்கிய உறவினர்கள்.

## காயம் ஏற்படவில்லை

கல்லால் எறிந்து எவருக்கும் காயம் ஏற்படவில்லை. இறந்தவருக்கு கல்பட்டிருக்கக் கூடும் எனக்குத் தெரியாது; ஐயா விழுந்த பின் கல்லால் எறிந்தார்கள் சுடும்போது கல்லால் எறியவில்லை.

## குறுக்கு விசாரணை

சட்டத்தரணி வி. என். நவரத்தினம் குறுக்கு விசாரணை செய்தார்.

கேள்வி: அவர்கள் சந்திக்கு வருமவரை அவர்களை காணக் கூடியதாக இருக்கவில்லை? -இல்லை.

கே: அதற்கு காரணம் சந்தியிலிருந்து 90 டிகிரி குறுக்கால் ஒழுங்கை போகிறது?-ஆம்

கே: வேலிக்கு ஊடாக பார்க்க கூடியநிலையில் இல்லை? -இல்லை.

கே: சந்திக்கு வந்தபின்தான் தம்பையா வீட்டு ஒழுங்கையும், சாட்சியின் ஒழுங்கையும் தெரியும்?-ஆம்

கே: தம்பையா வீடு சந்தி மூலையில் இருக்கிறது?-ஆம்

கே: மாமாவிற்கு காயம் ஏற்பட்டு ஒரு நிமிடத்தில் ஐயாவிற்கும் காயம் ஏற்பட்டு விட்டது?-ஆம்

கே: மாமாவிற்கு சூடு விழுந்ததும் ஐயாவிற்கு ஆத்திரம் வந்து சுடாதே என்றார்?-ஐயா திகைத்துப்போய்நின்றார். பின்னர் தகப்பன் வந்ததும் சுடாதே என்று சொன்னார்.

கே: அதற்கிடையில் வேறு ஒன்றும் செய்யவில்லை?-இல்லை

கே: நீங்கள் பொலிஸாருக்கு கொடுத்த முறைப்பாட்டில் முதல் முறை இவர்களை காணும் பொழுது 1-ம் எதிரியின் கையில் ஒரு துவக்கும் 2-ம் எதிரியின் கையில் ஒரு துவக்கும் இருந்ததாக கூறினீர்களா?-ஞாபகமில்லை.

சாட்சியமளித்த கணபதி நாகமுத்துவை, சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் குறுக்கு விசாரணை செய்தார்.

கேள்வி: எதிரிகள் உமக்கு உறவினரா?-ஆம்

கே: பல குடும்பங்கள் இச் சம்பவம் நடந்த இடத்தை சுற்றி இருக்கின்றார்கள்?-ஆம்

கே: உமக்கு பருத்தித்துறை நீதிமன்றத்தில் எத்தனை வழக்கு இருக்கிறது?-இல்லை

கே: பருத்தித்துறை நீதிமன்றத்திற்கு எத்தனை வழக்கிற்கு போயிருக்கிறீர்?-பார்க்கபோய் இருக்கிறேன் கேஸ் இல்லை.

கே: இன்றுவரை எதிரியாகவோ வழக்காளியாகவோ செல்லவில்லை?-ஒருமுறை சென்றேன்.

கே: இல்லை என்று சொல்லியிருந்தால் அது பொய்? -நினைவு இல்லை. முறைப்பாட்டுக்காரராக போயிருக்கிறேன்

கே: எந்த வழக்கில்?-15 20 வருடங்களுக்கு முன். வழக்கு நினைவு இல்லை.

கே: நான் சொல்கிறேன். நீர் எத்தனையோ வழக்குகளில் எதிரியாகவும் வழக்காளியாகவும் போயிருக்கிறீர்? -இல்லை.

கே: "சண்டியன் நாகமுத்து" என்றுதான் ஊரில் உம்மை கூப்பிடுவார்கள்? - அப்படி இல்லை.

கே: உமக்கு அந்த ஊரில் பல எதிரிகள் இருக்கிறார்கள்?-இல்லை.

இருபக்க விசாரணைகளும் முடிவடைந்ததை தொடர்ந்து நேற்று தொகுப்புரை ஆரம்பமானது. விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும். (ச)

புங்குடுதீவு

## கண்ணகி அம்மன் தேர்த்திருவிழா நாளை

[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவு அருள்மிகு கண்ணகி அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டமும் தேர்த்திருவிழாவும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

தேர் வெள்ளோட்டம் நாளை நண்பகல் 12-05 மணிக்கும் தேர்த்திருவிழா 1-25 மணிக்கும் நடைபெறும்.

# ஜனாதிபதியின்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

திரியும் தம்பதெனியா எம். பி.யுமான திரு கக்குபண்டா விஜயகோன், நேற்று முதல் தடவையாக உத்தியோகபூர்வமாக யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.

காலை 10-00 மணிக்கு துரையப்பா விளையாட்டு அரங்கில் ஹெலிகோப்டரில் வந்திறங்கிய மாவட்ட அமைச்சர் திரு விஜயகோனுடன் பாதுகாப்பு அமைச்சுசெயலாளர் கேர்ணல் சி ஏ தர்மபாலாவும் வந்திருந்தார்.

யாழ் மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் வீரதுங்க, யாழ் மாவட்ட செயலாளர் திரு யோகேந்திரா துரைசுவாமி டி. ஐ. ஜி. சிறில் ஹேரத், பொலிஸ் அதிபர் திரு வியேபெரேரா, உதவி பொலிஸ் அதிபர் திரு. ஹேரத் இன்ஸ்பெக்டர் திரு எஸ். சேனாதிராசா, இன்ஸ்பெக்டர் திரு. சிசிறகுமார ஆகியோர் அவர்களை வரவேற்றனர்.

மாவட்ட அமைச்சர் திரு. விஜயகோன் அரசாங்க செயலகத்திற்கு வந்தபோது கச்சேரி உத்தியோகத்தர்கள் பூரணகும்பம் வைத்துவரவேற்றார்கள்.

அரசாங்க செயலகத்தில் நடந்த மாநாட்டில் மாவட்ட அமைச்சர் உரைநிகழ்த்தினார். இம்மாநாட்டில் மாவட்ட இலாகா தலைவர்களும், செயலக உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். [கொ]




யாழ். ரோட்டறிக் கழகத்தின் 1979-80-ம் ஆண்டுக்கான தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட சட்டத்தரணியும் பதில் நீதவானுமான திரு. எஸ். கனகரத்தினம், தலைமைப் பதவியைப் பொறுப்பேற்று உரையாற்றுகையில் எடுக்கப்பட்ட படம்.

## சிங்கப்பூர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கும் வேலை உண்டு என்றும் இறக்குமதி வேலைகளைப் பொறுப்பேற்றுள்ள கப்பல் ஏஜண்டுகளான க. ஜெயபாலசிங்கம் கம்பனியின் பிரதிநிதி தெரிவித்துள்ளார். காங்கேசன்துறை துறைமுகத்துக்கு இவ்வருடத்தில் வந்துள்ள ஆறாவது உணவுக்கப்பலான 'பன்ராரவ' இறக்குமதி வேலைகள் நான்கு நாட்களில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பங்களாதேஷ்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

டன் 10லட்சம் ரூபாய் பணயப் பணமாகத் தரவேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

கல்கத்தாவில் டம்டம் விமான நிலையத்தில் தரையிறங்கிய இவ்விமானத்திலிருந்த மூன்று பயங்கரவாதிகளும் பின்னர் ஆயுதங்களை கொடுத்துவிட்டு சரணடைந்தனர்.

## அதிபர்களுக்கு பயிற்சி

[கொழும்பு]

கல்வி அமைச்சு ஐயாயிரம் பாடசாலை அதிபர்களுக்கும் சிரேஷ்ட ஆசிரியர்களுக்கும் பயிற்சியொன்றினை நடத்தவுள்ளது.

கல்வி அதிபர் திரு. எஸ். பாலிகாகர இதுபற்றித் தெரிவிக்கையில், இப் பயிற்சி நெறியானது கொழும்பு நகரு மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலுள்ள அதிபர்களுக்கும் சிரேஷ்ட ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுமென்றார்.

## கோண்டாவில் சிவகாமி அம்பாள் ஆடிப்பூர விழா

[கோண்டாவில்]

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ சிவகாமி அம்பாள் கோவில் ஆடிப்பூரத் திருவிழா நாளை பகல் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து விசேஷ ஆராதனைகளும் 'குதுசோபனசாந்தி' வைபவமும், இரவு விசேஷ நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருக்கின்றன.

## இன்று வானொலியில் தங்கத்தாத்தா

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்சேவை ஒன்றில் இன்றிரவு 10-15 மணி தொடக்கம் 11 மணி வரை 'தங்கத்தாத்தா' என்ற இசைச் சித்திரம் இடம்பெறும். திருவரங்கநாயகி எழுதிய இச்சித்திரத்தை திருமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் தயாரித்தளிக்கிறார். [அ]

## யாழ். தேவி தடம்புரண்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்று நண்பகல் கொழும்பு சென்ற யாழ். தேவி ரயில் வண்டி, பளைக்கு அண்மையில் தடம் புரண்டதாக அறிவிக்கப்படுகிறது. இந்த விபத்தில் பிரயாணிகளுக்கோ ரயில் பெட்டிகளுக்கோ எதுவித சேதமும் ஏற்படவில்லை.

இன்று வழமைபோல், சேவை நடைபெறுமாயினும் நேற்று வடபகுதி ரயில்சேவைகள் இரண்டு மணித்தியாலங்கள் தாமதமாகின. (ஜெ)

## மரண அறிவித்தல்

தா. சண்முகநாதன் (முனியப்பதாசன்)

பிரபல சிறுகதை எழுத்தாளர் தா. சண்முகநாதன் (முனியப்பதாசன்) காலமானார். இவர் கா. தாமோதரம்பிள்ளை-இராசம்மா தம்பதிகளின் புதல்வனும் திருமதி கமலாதேவி முத்துக்குமாரு, மருதயனார் [மருட்], ரகுநாதன் [ஈராக்] ஆகியோரின் சகோதரரும், ரி. செல்லத்துரை [முன்னாள் பிரதம டிசைனர் வெள்ளவத்தை நெசவாலை] அவர்களின் மருமகனும், கொழும்பு சட்டத்தரணி எஸ். ரவீந்திரன் திட்டமிடல் அமைச்சுப்பணியாளர் எஸ் குணரத்தினம், புஷ்பராணி மருதயனார் [ஊரெழு] ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று [26-7-79] வியாழக்கிழமை பிற்பகல் 4-00 மணிக்கு யாழ்ப்பாணம், இந்துக் கல்லூரி ஒழுங்கை 56/3 இலக்க இல்லத்திலிருந்து தனக்கிரி பைக்காரக் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். 8145

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் க்காக அதன் பிரசுராலயமான 1ம் நம்பர் கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் 26ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QJ 8945/78 The Eelanadu P B No: 49, Telegrams: Eelanadu Jaffna Tel: 589.